# தமிழ்ப் பல்கலைக்கழகம்

(தேசிய தரமதிப்பீட்டு குழுமத்தால் B+ தரச்சான்று பெற்றது)

## தொலைநிலைக் கல்வி இயக்ககம்

## தஞ்சாவூர் - 613 010.

தொலைபேசி: 04362 227152, 227434

மின்னஞ்சல்: ddetu2006@gmail.com


முனைவர் பா. ஜெயக்குமார்
இயக்குநர்(பொ)

சார்வரி, தை 27
திருவள்ளுவராண்டு- 2052
நாள்:09.02.2021

பெறுநர்

ஐயா,

பொருள்: இளங்கல்வியியல் 2020C - கற்றல் கற்பித்தல் பயிற்சி அனுமதித்தல் - தொடர்பாக.

பார்வை : 1. தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் ஆணை நாள்: 04.05.2017
2) அரசாணை நிலை எண்: 77, பள்ளிக் கல்வி (தொ.க.1(2)) துறை நாள்: 24.4.2017

******

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் இளங்கல்வியியல் பட்டப்படிப்பு 2008ஆம் ஆண்டு முதல் NCTE (அனுமதி ஆணை F.SRC/NCTE/B.ED./DE/2017-18/98588) மற்றும் DEB அங்கீகாரத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பயிலும் மாணவர்கள் அரசு/ அரசு நிதி உதவி / தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் படிப்பின் ஒரு பகுதியாக ஒவ்வொரு பயிற்சி ஆசிரியரும் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அப்பயிற்சி ஆசிரியர்கள் பார்வை 1-இன்படி, எட்டாம் வகுப்பு அல்லது ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 90 வேலை நாட்கள் (முதலாம் ஆண்டு 15 நாட்கள் உற்றுநோக்கல் பயிற்சியும் 30 நாட்கள் கற்பித்தல் பயிற்சியும் மொத்தம் 45 வேலை நாட்கள் மேற்கொள்ள வேண்டும்) கற்பித்தல் மற்றும் உற்று நோக்கல் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இதே நடைமுறையை இரண்டாமாண்டு கற்பித்தல் பயிற்சியிலும் மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயக்குநர்(பொ) 9/2/2021